1995 நவம்பர் 10]

என்று இருக்கின்றன. அதுபோன்று, பள்ளி விடுதிகள் மொத்தம் 738-ல், மாணவர் விடுதிகள் 620-ம் மாணவியர் விடுதிகள் 118-ம் இருக்கின்றன. எனவே, தமிழக அரசின் புதிய கொள்கை முடிவின்படி, இனி மாணவியர் விடுதி திறப்பது என்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுதவிர, அண்மைக் காலத்தில் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அத்தகைய விடுதிகளைத் திறப்பதற்காக ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில், வெங்கலம் என்னும் பகுதியில் ஒரு மாணவியர் விடுதி திறப்பதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92. டாக்டர் ஜி.ஆர். மாலா, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

92—

விடுதிக்கு அடிப்படை வசதிகள் செய்தல்

*13297—டாக்டர் ஜி.ஆர். மாலா:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி அண்ணா ஸ்டேடியத்தில், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் விளையாட்டு விடுதியில் தங்கும் மாணவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருச்சி அண்ணா ஸ்டேடியத்தில் உள்ள விளையாட்டு விடுதியில் மாணவர்கள் தங்குவதற்கு போதிய அடிப்படை வசதிகள் ஏற்கனவே செய்து தரப்பட்டுள்ளன.

[1995 நவம்பர் 10

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

93—

ஆரணி தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைத்தல்

*77379—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே என்னுடைய கன்னிப் பேச்சிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு முறையும் வாய்ப்பு கிடைக்கின்றபோதெல்லாம் ஆரணிக்கு கல்லூரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் பல குறைகளை நீக்கி நிறைவு செய்தவர் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். கடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சட்டமன்ற மற்றும் உள்ள மன்ற உறுப்பினர்கள் அளவிலும் ஏகமனதாக ஆரணியில் ஒரு மகளிர் கல்லூரியை அமைக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்: இந்த மன்றத்தினுடைய தீர்மானம் என்பது அந்த மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை மக்களுடைய தீர்மானமாக நான் கருதுகிறேன். ஆகவே, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மக்களே ஆரணிக்கு ஒரு கல்லூரியைத் தர வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்த மாவட்ட மக்களுடைய பிரதிநிதிகளின்

1995 நவம்பர் 10]

ஏகமனதான இந்தத் தீர்ப்பை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் வாய்ப்பு கிடைக்கும்போது பரிசீலிக்கலாம் என்றுதான் இதுவரை சொல்லி வந்திருக்கிறேன். செய்யாறு, திருவண்ணாமலை ஆகிய இடங்களிலே அரசு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. தெள்ளாறு, வந்தவாசி ஆகிய இடங்களில்- சுய நிதிக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசின் தற்போதைய நிதிநிலையில், புதிய அரசு கல்லூரிகள் தொடங்க இயலாது என்பதைப் பலமுறை இங்கே தெரிவித்து இருக்கிறேன். கல்வி முகமைகள் ஏதும் விண்ணப்பித்தால் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு விதிமுறைகளிலே வழி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு முன்பு கேட்டபோதெல்லாம் இதே பதிலைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் முயற்சி எடுத்தால் அரசு, விதிமுறைகளின்படி அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி நானும் பலமுறை தனியார் கல்லூரிகளை இங்கே அமைக்க முடியுமா என்பதை முயற்சி செய்து பார்த்தேன். நான், என்னுடைய வீட்டில் இருக்கின்ற குழந்தைக்குப் பசிக்கிறது என்று சொன்னால் அமைச்சர் அடுத்த வீட்டில் இருக்கின்ற குழந்தை நன்றாக உண்டுகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன். ஆரணி தொகுதியிலேயிருந்து கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு 3,000க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் மேற்கொண்டு கல்வி பயில்வதற்காக, கல்லூரிகளுக்குச் செல்வதற்காக அடுத்த ஊர்களுக்குச் செல்கின்ற நிலை அங்கே இருக்கிறது. குறிப்பாக, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் செல்கிறார்கள். எனவே, இதுவரை அமைச்சர் பரிசீலனை செய்து வருகிறேன் என்றுகூட இங்கே சொல்லவில்லை. ஆகவே எனக்கு அந்த உறுதிமொழியாவது 'வருகின்ற காலத்திலே அரசு செய்யும்' என்ற அந்த உறுதிமொழியாவது தருவாரா? அதையாவது என்னுடைய தொகுதி மக்கள் கேட்டு ஆனந்தம் அடைவார்கள். எனவே, அந்த உறுதிமொழியாவது தருவாரா என அறிய விரும்புகிறேன்.